நகராட்சி அலுவலகம்
பொன்னேரி.

கூட்டம் எண். 06 / 2024 நாள்: 26.12.2024

# <u>சாதாரணக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர். திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30.12.2024 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரி நகராட்சி

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

**<u>பொருள் எண் 1</u>**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் நவம்பர் 2024 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்:606 நாள்: 30.12.2024**

**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.**

**<u>பொருள் எண் 2</u>**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் நவம்பர் 2024 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:607 நாள்: 30.12.2024**

**தீர்மானம்: மன்ற;த்தின் பார்வைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.**

**<u>பொருள்எண் 3</u>**

இந்நகராட்சியில் 2025 -ம் ஆண்டிற்கு சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் இரசீதுகள் , அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள், படிவங்கள், A4 அளவு வெள்ளைத்தாள்கள் , எழுது பொருட்கள், Toner மற்றும் இதர பொருட்களை அரசு பதிவு பெற்ற கூட்டுறவு சொசைட்டி நிறுவனத்திடமிருந்து வாங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.10.00/- இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண் 122/ 2024/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்**:608 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: தேவையான பதிவேடுகள், படிவங்கள், A4 அளவு வெள்ளைத்தாள்கள் , மற்றும் இதர பொருட்களை, தோராய செலவினம் ரூ.10.00/- இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது,

**<u>பொருள்எண் 4</u>**

பொன்னேரி நகராட்சியின் வருடாந்திர பங்குத்தொகை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படாமல் உள்ளதாகவும், மேற்படி நிலுவையில் உள்ள வருடாந்திர பங்குத்தொகை ரூ.1,40,000/- யை உடன் செலுத்தக்கோரி இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண் **047/2024/A2** நாள்:**05.12.2024** ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வருடாந்திர பங்குத்தொகையை செலுத்தவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

   ( ந.க.எண் 1382 /2024 /அ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 609 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: வருடாந்திர பங்குத்தொகையை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள்எண் 5</u>**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 ன் கீழ் கீழ்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை - 28 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை, அலுவலக கடித எண் 26740/2024 SBM-1(L) நாள் 09.11.2024 ன்படி 29.11.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 | மதிப்பீட்டு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | சர்ச் தெரு, நெல்லூரம்மன் கோயில் தெரு, கள்ளுக்கடைமேடு, சிவராஜ் தெரு, துர்கா நகர் மற்றும் தர்மலிங்கம் 3வது தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சமுதாயக் கழிப்பிடங்களில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணி | 2.30 | திரு.R.பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | M/s. Land Star Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 16.78% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை தொடந்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

( **ந.க.எண்** 917/2022 /**இ**1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 610 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 ன் கீழ் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.

**பொருள்எண் 6**

பொன்னேரி நகராட்சியில் பொது நிதி 2024-25ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 864/2024/இ1 நாள் 27.11.2024ன்படி 11.12.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் பொது நிதி 2024-25 | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரையிலான சேதமடைந்துள்ள அனைத்து சாலைகளையும் GSB கொண்டு தற்காலிகமாக சீரமைத்தல் பணி | 4.50 | திரு.R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | M/s. Landstar Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.17% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணிகளின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**(** ந.க.எண்.864 /2024/இ1 )

**நகர்மன்ற தீர்மான எண்**: 611 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**:

**பொருள்எண் 7**

பொன்னேரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொண்டதாலும் இயற்கை இடர்பாடுகளினாலும் சேதமடைந்த சாலைகளை சீரமைத்திடவும் நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் ஆகியோர் நேரிடையாக தள ஆய்வு செய்யப்பட்டபோது வழங்கிய அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 வேணுகோபால் 5 வது தெரு, 5 வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.10 |
| 2. | பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 வேணுகோபால் 2 வது தெரு 2வது குறுக்கு தெரு, வேணுகோபால் 4 வது தெரு 1 வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 11.20 |

**அலுவலக க்குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 612** **நாள்: 30.12.2024**

**தீர்மானம்**: Wd 5 வேணுகோபால் 5 வது தெரு, 5 வது குறுக்கு தெரு CC Road அமைத்தல் Wd 5 வேணுகோபால் 2 வது தெரு 2வது குறுக்கு தெரு, வேணுகோபால் 4 வது தெரு 1 வது குறுக்கு தெரு CC Road அமைத்தல் மன்றம் அனுமதி அளிக்கிறது. பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 8**

பொன்னேரி நகராட்சி பொறியாளரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN 18 BQ 2035- ற்கு காப்பீடு முடியும் தருவாயில் உள்ளதால், Insurance Premium புதுப்பித்து கொள்ள ரூ. 32,605/- காசோலை வழங்குமாறு United India Insurance நிறுவனம் மூலமாக Invoice பட்டியல் வரப்பெற்றுள்ளதை, மன்ற பார்வைக்கும், மேற்கண்ட நிறுவனத்திற்கு காப்பீடு தொகை செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க. எ.ண் 659/2021/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 613 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: **நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு** BOLERO TN 18 BQ 2035 – காப்பீடு தொகை செலவினம் - மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 9**

பொன்னேரி நகராட்சி, நகர்மன்ற தலைவரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள Scorpio வாகனம் ( எண் TN18BM5937 ) பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.6740 /- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலமாக பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.(654/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 614 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: Scorpio TN18BM5937 பழுதுநீக்கம் , பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.6740/- தொகை பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 10**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் வாட்ஸ் அப் செய்தி நாள் **21.12.2024** - ன்படி இந்நகராட்சியில் “ மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழில் புரிவோர் யாருமில்லை” என்பதை அவர்களது மறுவாழ்வு சட்டம் **2013**, பிரிவு **11** ன்படி, பொதுமக்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் **15** நாட்களுக்குள் ஆணையருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க கோரும் அறிவிப்பை தினசரி செய்தித்தாளில் விளம்பரம் செய்ய தோராய செலவு ரூ **20,000** /- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம் .

( **ந.க.எண்**.411 /2024/**எச்**1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 615 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழில் புரிவோர் யாருமில்லை" செய்தித்தாளில் விளம்பரம் செய்ய தோராய செலவு ரூ 20,000 /- க்கு மன்றம் அனுமதி வழங்குகிறது

**பொருள்எண் 11**

பொன்னேரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொண்டதாலும் இயற்கை இடர்பாடுகளினாலும் சேதமடைந்த சாலைகளை சீரமைத்திடவும் நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் ஆகியோர் நேரிடையாக தள ஆய்வு செய்யப்பட்டபோது வழங்கிய அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணிகளின் பெயர்<br>பொதுநிதி(2024-25) | மதிப்பீட்டு தொகை<br>(ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 வேணுகோபால் தெரு, சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.60 |
| 2. | பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 பெரிய தம்பி தெரு GSB Wet mix கொண்டு நிரப்புதல் பணி | 2.10 |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 616 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: **வார்டு 18** வேணுகோபால் தெரு, சிமெண்ட் சாலை அமைத்திட ரூ 5.60 இலட்சம்., **வார்டு 3** பெரிய தம்பி தெரு GSB Wet mix கொண்டு நிரப்புதல் ரூ 2.10 இலட்சம் மன்றம் அனுமதி வழங்குகிறது

**பொருள்எண் 12**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தில் கட்டப்பட்டுள்ள கீழ்கண்ட விவரப்படியான கழிவறைக்கு கூடுதல் பணிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு

| வ.எண் | வார்டு எண் | பணிகளின் பெயர்<br>பொதுநிதி 2024-25 | மதிப்பீடு<br>(ரூஇலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | நரிகுறவர் காலனி பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் கூடுதல் பணி | 12.00 |
| 2 | 21 | தேவமாநகர் பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் கூடுதல் பணி | 9.50 |
| 3 | 8 | புளியந்தோப்பு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் கூடுதல் பணி | 11.00 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 617** **நாள்: 30.12.2024**

**தீர்மானம்**: தூய்மை இந்தியா 2.0 திட்டத்தில் கழிவறைக்கு கூடுதல் பணிகள் Wd 1 நரிகுறவர் காலனி ரூ12.00 இலட்சம் Wd 21 ரூ9.50 & Wd 8 ரூ11.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது

**<u>பொருள்எண் 13</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை -23 அவர்களின் 31.03.2021-ம் தேதிய கடிதத்தில் Director of Census Operation & Citizen Registration அவர்களுக்கு நகராட்சியின் GIS வடிவத்தில் தயார் செய்யப்பட்டுள்ள நகராட்சி மற்றும் வார்டு எல்லைகளை காண்பிக்கும் வரைபடங்கள் Shape File Format (.shp)-ல் தயார் செய்து நடைபெற உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை எளிதாகவும் விரைவாகவும் முடித்திட ஏதுவாக எதிர்வரும் Census ல் உள்ள EB எல்லைகளை விரிவாகும் எல்லைகள் கூடுதலாக ஏற்படுவதை தடுக்கும் விதமாக பணிகள் மேற்கொள்ள நகராட்சி எல்லை மற்றும் வார்டு எல்லைகளில் விவரங்களை Shape File Format -ல் தயார் செய்து மேற்படி வரைபடத்தில் நகராட்சி எல்லை, வார்டு எல்லை, சாலைகள் மற்றும் நீர்நிலைகள் குறித்த விவரங்கள் இடம் பெறும் வகையில் தயார் செய்து Director of Census Operations & Citizen Registration அவர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் GIS தொழில் நுட்பம் கொண்டு Shape File Format ல் நகராட்சி வரைபடம் ஏதும் இதுவரை தயார் செய்யப்படாததால், மேற்படி வரைபடங்கள் நடைபெற உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என Director of Census Operation & Citizen Registration அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே GIS தொழில் நுட்பம் மூலம் இந்நகராட்சியின் வரைபடத்தை நகராட்சி எல்லை, வார்டு எல்லை, சாலைகள் மற்றும் நீர்நிலைகள் விவரங்களுடன் GIS MAP தயார் செய்யும் நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 1320 /2024/F1)

**நகர்மன்ற தீர்மான எண்: 618** **நாள்: 30.12.2024**

**தீர்மானம்** : Director of Census Operations & Citizen Registration – GIS MAP தயார் செய்யும் நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள - செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்குகிறது .

## மேசைப்பொருள் 14

சட்டமன்ற அறிவிப்புகள் 2022 – 2023 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கூடுதல் கட்டிடத்தில் அமைத்துள்ள நகர் மன்ற கூடத்திற்கும் மற்றும் நகர் மன்ற தலைவர் அறைக்கும் தேவையான மேசைகள் மற்றும் நாற்காலிகள் கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.9.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டதில் இந்நகர் மன்றம் தனது தீர்மான எண்.521 நாள்.30.08.2024ல் அனுமதி வழங்கியுள்ளது. பொருட்கள் கொள்முதல் செய்திட TANSI நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பியதில் தற்போது INVOICE பெறப்பட்டுள்ளது. மேற்காணும் பொருட்கள் சப்ளை செய்ய **ரூ.21,21,062**/- தொகை வழங்கிட தெரிவிக்கப்பட்டிருப்பதால், பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண். 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 619 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: 2022–2023 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கூடுதல் கட்டிடத்திற்கு தேவையான மேசைகள் நாற்காலிகள் கொள்முதல் செய்திட TANSI நிறுவனத்திற்கு INVOICE **ரூ.21,21,062**/- வழங்கிட செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## மேசைப்பொருள் எண் 15

பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொன்னேரி கிராமம் I, சர்வே எண்/ 397/9, 10, 87 மற்றும் 396 /18 ல் மனை எண்கள் 1 , 2, 3, 4, 29, 30 மற்றும் 31 ல் புதிய பெட்ரோல் பங்க் அமைக்க தடையில்லா சான்று வழங்கக்கோரிய திருமதி. வி.கல்பனா என்பவரின் மனு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

### அலுவலகக்குறிப்பு

பெட்ரோல் பங்க் அமைக்க உள்ள இடம் நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ம.வ.ந.ஊ.இ.எண் 353 /2002 ன் படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைகிறது. மேற்படி இடத்திற்கு அணுகு சாலையாக நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலை ( பொன்னேரி - பழவேற்காடு சாலை) உள்ளது. மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகளை ஒருங்கிணைத்து ( Plot Amalgamation ) பெட்ரோல் பங்க கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு துறையிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்றும் இதனை தொடர்ந்து நகராட்சியிடம் கட்டிட அனுமதி பெற்றும் கட்டிடம் துவங்கப்பட வேண்டுமென என்ற நிபந்தனை பேரில் ஆட்சேபணை இல்லை என்று சான்று வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

( ந.க.எண் 1088 /2024/F1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 620 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்** : கொண்டு வரப்பட்டுள்ள நிபந்தனை பேரில் ஆட்சேபணை இல்லை என்று தடையில்லா சான்று வழங்க மன்றம் தீர்மானிக்கிறது. மனுதாரருக்கு இதனை தெரிவிக்கலாம்.

**<u>மேசைப்பொருள் எண் 16</u>**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் பொன்னேரி 2 கிராமம் வருவாய்துறைக்கு சொந்தமான புல எண் **510/1A,1B,2**-ல் உள்ள நிலத்தில் புதியதாக சார்பதிவாளர் அலுவலகக்கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவாக நிலம் ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாகத்தின்மூலம் தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்குமாறு சார்பதிவாளர், பொன்னேரி அவர்களின் கடிதம் ந.க.எண் **312/2024** நாள் **30.12.2024** வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் புதியதாக சார்பதிவாளர் அலுவலகக்கட்டிடம் கட்ட ஏதுவாக நிலம் ஒதுக்கீடு செய்திட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( **ந.க.எண்**. 1397 /2024/**எப்**1)

நகர்மன்ற தீர்மான எண்: 621 நாள்: 30.12.2024

**தீர்மானம்**:

**<u>மேசைப்பொருள் எண் 17</u>**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தில் கட்டப்பட்டுள்ள கீழ்கண்ட விவரப்படியான கழிவறைக்கு கூடுதல் பணிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு

| **வ.எண்** | **வார்டு எண்** | **பணிகளின் பெயர்<br>தூய்மை இந்தியா 2.0 திட்டம்** | **மதிப்பீடு (ரூஇலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | 4 | சுந்தர்ராஜ் தெரு அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் கூடுதல் பணி | 12.00 |
| 2 | 25 | கண்ணபிரான் தெரு அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் கூடுதல் பணி | 11.00 |
| 3 | 26 | வேண்பாக்கம் பள்ளம் தெரு அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் கூடுதல் பணி | 11.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கான செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக

**நகர்மன்ற தீர்மான எண்**: 622 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: தூய்மை இந்தியா 2.0 திட்டத்தில் கழிவறைக்கு கூடுதல் பணிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் - மன்றம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குகிறது.

**மேசைப்பொருள் எண் 18**

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் சாலைகள் பழுதடைந்து உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரின் நேரடி தள ஆய்வின் போது வழங்கிய அறிவுரையின் படி கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு.

| **வ.எண்** | **வார்டு எண்** | **பணிகளின் பெயர் பொதுநிதி(2024-25)** | **மதிப்பீடு ( ரூ இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | 19 | நாடார்ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள இடுகாடு அபிவிருத்தி பணி | 19.50 |
| 2 | 17 | பாலன் நகர் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 15.00 |
| 3 | 17 | ராஜன் நகர் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 18.00 |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு திட்ட ஒதுக்கீடு பெற்று செய்யலாம் மேலும் காலதாமதம் ஏற்பட்டால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்ப நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்**: 623 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்** : நாடார்ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள இடுகாடு அபிவிருத்தி பணி, பாலன் நகர் CC Road, ராஜன் நகர் CC Road பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**மேசைப்பொருள் எண் 19**

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23ல் கீழ்கண்ட பகுதிகளில் சாலைகள் பழுதடைந்து உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரின் நேரடி தள ஆய்வின் போது வழங்கிய அறிவுரையின் படி கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூஇலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 23 | ஓம் சாய் டவுன்ஷிப் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 9.00 |
| 2 | 23 | ஓம் சாய் டவுன்ஷிப் 2 வது தெரு மற்றும் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 15.50 |
| 3 | 23 | சாய் கிருபா நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 19.50 |
| 4 | 23 | முத்தமிழ் நகர் பிரதான சாலை தார் சாலை அமைத்தல் | 12.50 |
| 5 | 23 | முத்தமிழ் நகர் 1 வது மற்றும் 2 வது தெரு தார் சாலை அமைத்தல் | 14.50 |
| 6 | 23 | முத்தமிழ் நகர் 3 வது மற்றும் 4 வது தெரு தார் சாலை அமைத்தல் | 15.00 |
| 7 | 23 | முத்தமிழ் நகர் 5 வது மற்றும் 6 வது தெரு தார் சாலை அமைத்தல் | 11.00 |

**அலுவலக க்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு திட்ட ஒதுக்கீடு பெற்று செய்லாம் மேலும் காலதாமதம் ஏற்பட்டால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்ப நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்**: 624 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: wd – 23 ல் சாலைகள் அமைக்க திட்ட மதிப்பீடுகள் – செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**மேசைப்பொருள் எண் 20**

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண்19ல் அமைந்துள்ள நாடார்ரைஸ்மில் சாலை பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் சாலையாகும். தற்போது இந்த சாலை 4 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இருபக்கமும் வாகனங்கள் செல்ல இடநெருக்கடியாக இருப்பதால் இந்த சாலையை மேலும் அகலபடுத்துவது அவசியமாகிறது. எனவே பொதுமக்களின் நலன்கருதி இச்சாலையை அளவீடு செய்து அகலபடுத்த மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலக க்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்**: 625 **நாள்**: 30.12.2024

**தீர்மானம்**: வார்டு 19-ல் நாடார்ரைஸ்மில் சாலை அகலப்படுத்த மன்றம் அனுமதி வழங்குகிறது

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்